# மேட்டுர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **MCOP. No. 1/2021** | **Date : 08.11.2024** | **PW 1** |
| Name: சுசீலா | W/o. குப்புசாமி | |

**முதல் விசாரணை தொடர்ச்சி :–**

நான் ஏற்கனவே இவ்வழக்கில் கடந்த 16.12.2022 தேதியன்று முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தின் மூலம் விசாரிக்கப்பட்டு அன்றைய தினம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் ம.சா.ஆ.7 ஆவணமாக இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அன்றைய தினம் ம.சா.ஆ.7 ஆவணமாக TN 37 CX 1813 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் நகல் மட்டுமே குறியீடு செய்யப்பட்டுள்ளது. தவறுதலாக இரு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை என்று குறிப்பிடப்பட்டுவிட்டது. தற்போது TN93 A 7383 என்ற பதிவெண் கொண்ட பல்சர் இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி ஆவணத்தை **ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

ஒம்/–சுசீலா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.